## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.41/2018

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வேலு நாயுடு | மதம் | : இந்து |
| த/பெ | : மன்னார் நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 76 | கிராமம் | : கிருஷ்ணசமுத்திரம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**16.04.2025**

**வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது முழு பெயர் என்ன என்றால் தோட்டக்கார வேலு ஆகும். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். சின்னராஜன் யார் என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்தவர் ஆவார். அவர் எனக்கு என்ன உறவு என்றால் நாங்கள் ஒரே கிராமத்தை சேர்ந்தவர்கள். வாதி இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்பது தெரியுமா என்றால் கண்ணம்மா, பட்டாபி, சேகர் ஆகியோரிடம் இருந்து சின்னராஜன் நிலம் வாங்கியுள்ளார். அதில் துரை மற்றும் துரை வகையறா பிரவேசிக்க கூடாது என வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

2. வழக்கு சொத்தை எப்போது வாதி வாங்கினார் என்றால் 1993ல் வாங்கினார். எனக்கு எப்படி அந்த விவரம் தெரியும் என்றால் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேன். ஆவண எண் தெரியுமா என்றால் ஆவண எண் தெரியாது. நான் ஆவணத்தில் உள்ள மொத்த விவரங்களையும் படித்து பார்த்துதான் கையெழுத்து செய்தேனா என்றால் ஆமாம். சொத்து பற்றிய விவரம் சொல்ல முடியுமா என்றால் கிழமேல் 25 1/2 அடி, தென்வடல் 60 அடி, பின்புறம் உள்ள சொத்து 12 1/2 க்கு 57 அடியாகும். சொத்தின் நான்கு எல்லை தெரியுமா என்றால் தற்போது யார் உள்ளார் என்பது எனக்கு தெரியாது.

3. சொத்தின் நான்கு எல்லையே தெரியாமல் நான் எவ்வாறு சொத்து பற்றி

சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சொத்தின் மேற்கு பக்கம் எதிர்வாதியின் மகன் உள்ளார். சொத்தின் கிழக்கு பக்கம் யார் உள்ளார் என்றால் நாகா ரெட்டியின் மகன் உள்ளார். **(சாட்சி தற்போது பின்வருமாறு மாற்றி கூறுகிறார்)** கணேச ரெட்டியின் மகன் நாகா ரெட்டியின் பேரன் உள்ளார். வழக்கு சொத்தின் தெற்கே யார் உள்ளார் என்றால் என்னால் சொல்ல முடியாது. வழக்கு சொத்தின் தெற்கே என்ன உள்ளது என்றால் காலியிடம் உள்ளது. நான் சாட்சி கையெழுத்திட்டதாக சொல்லியுள்ள வா.சா.ஆ 2 கிரைய ஆவணத்தில் வீட்டு மனைக்கு தெற்கு என்றுதான் சொல்லப்பட்டுள்ளது என்றாலும் யாருடைய வீட்டு மனை என குறிப்பிடப்படவில்லை என்றாலும் எனக்கு தெரியாது.

4. வழக்கு சொத்தின் நான்கு எல்லையே தெரியாமல் நான் சாட்சி கையெழுத்திட்டுள்ளதே செல்லாது என்றால் சரியல்ல. நான்கு பக்க எல்லை குறிப்பிடாமல் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 2 ஆவணம் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து யாருடைய அனுபவத்தில் உள்ளது என்றால் சின்னராஜன் அனுபவத்தில் உள்ளது. எந்த வகையில் வாதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் குளியல் அறை கழிப்பறை கட்டியுள்ளார். வாதி அவரது வீட்டின் முன்புறம் குளியல் அறை கழிப்பறை கட்டியுள்ளார் என்றால் இல்லை. பின்புறம்தான் கட்டியுள்ளார். குளியல் அறை கழிப்பறை எந்த ஆண்டு கட்டப்பட்டது என்றால் அவர் கிரையம் வாங்கிய பின்பு கட்டினார். எந்த வருடம் என்று தெரியாது. நான் பிறந்ததில் இருந்தே அதே ஊரில் வசிக்கிறேன் என்றால் சரிதான். குளியல் அறை கழிப்பறை கட்டுவதற்கு முன்பு அந்த சொத்தில் என்ன இருந்தது என்றால் கண்ணம்மாள் வீடு கட்டியிருந்தார்.

5. கண்ணம்மாள் கட்டியிருந்த வீட்டிற்கு பட்டா இருந்ததா என்றால் தெரியாது. நான் சொல்வதுபோல் வீடு இருந்ததற்கான எந்த ஆவணங்களோ பட்டாவோ தாக்கல் செய்யவில்லை என்றாலும் நான் வீடு கட்டியிருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்து சம்மந்தப்பட்ட வருவாய் ஆவணங்கள் எதுவும் வாதி தாக்கல் செய்துள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. எதுவுமே தெரியாமல் ஏன் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் நான் சாட்சி கையெழுத்திட்டதால் சாட்சி சொல்ல வந்துள்ளேன். என் பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 4 ல் வேண்டுமென்றே 2018 ல் இருந்து தகராறு செய்வதாக சொல்லியிருப்பதில்

என்ன தகராறு செய்கிறார்கள் என்றால் என்ன தகராறு என்று எனக்கு தெரியாது. ஆனால் சின்னராஜன் வாங்கியது மட்டும் உண்மை.

6. என்ன தகராறு என்று தெரியாமல் நான் எப்படி பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சின்னராஜன் கிரையம் வாங்கியுள்ளார். பிரதிவாதிகள் என்ன வழக்கு போட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. எனவே என்னால் அதை பற்றி சொல்ல முடியாது. யார் யாரிடம் தகராறு செய்தார்கள் என்று சொல்ல முடியுமா என்றால் சின்னராஜன் துரை இடையே தான் வழக்கு. எத்தனை வருடங்களாக வாதி வழக்கு சொத்தில் அனுபவத்தில் உள்ளார் என்றால் கிரையம் வாங்கி 30 வருடம் இருக்கும். 30 வருடமாக இவர் அனுபவத்தில் உள்ளார். பிரதிவாதி பிரச்சனை செய்தது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்களா என்றால் அது எனக்கு தெரியாது.

7. கண்ணம்மாளின் பூர்வீக சொத்தை சின்னராஜன் கிரையம் வாங்கியதாக சொல்லியிருப்பதில் கண்ணம்மாளின் பூர்வீக சொத்து என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளார்களா என்றால் தெரியாது. எந்த விவரமும் தெரியாமல் நான் சொல்லும் சாட்சியம் செல்லாது என்றாலும் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றாலும் சரியல்ல. கண்ணம்மாளின் பூர்விகம், வகையறா பற்றி தெரியுமா என்றால் கண்ணம்மாவின் கணவர் பெயர் மாணிக்கம் ஆகும். கண்ணம்மாவின் விவரமே தெரியாமல் அவரது பூர்வீக சொத்தை வாங்கியதாக எந்த அடிப்படையில் சொல்கிறேன் என்றால் கண்ணம்மாள் பெயரில் சொத்து இருந்தது. அதனால் சின்னராஜன் வாங்கியுள்ளார். கண்ணம்மாள் பெயரில் சொத்து இருந்தது என்பதை காட்ட ஆதாரம் எதுவும் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது.

8. தாவா சொத்து பிரதிவாதிகளின் முன்னோர்கள் அனுபவித்தில் இருந்தது என்றாலும் அதில் அவர்கள் மாடு கட்டி, வைக்கோல் போர் அமைத்து அனுபவித்து வந்தனர் என்றாலும் அதற்கு முன்பு யார் அனுபவித்தார்கள் எனக்கு தெரியாது. வாதி கிரையம் வாங்கியதில் இருந்து வாதி அனுபவித்து வருகிறார். எந்த விவரமும் தெரியாமல் நான் இந்த வழக்கில் பொய்யாக சாட்சி கையெழுத்திட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் நான் சொல்லும் சாட்சியம் செல்லாது என்றாலும் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றாலும் சரியல்ல. வாதி வேண்டுமென்றே பிரதிவாதிகள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்து பிரதிவாதிகளை தொந்தரவு செய்து

வருகிறார் என்றால் இல்லை.

9. வழக்கு சொத்தின் மதிப்பு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்து மதிப்பு ரூ.11 லட்சத்திற்கு மேல் இருக்கும் என்றாலும் குறைவான மதிப்பிற்கு பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல. குறைவான நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. குறைவாக மதிப்பு காட்டி பொய்யான ஆவணங்கள் அடிப்படையில் தாக்கல் செய்த இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. என் சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)